# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
*************

## ஊடக அறிக்கை

### பெய்லி பால தொகுதிகள் கையளிப்பு

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (பொருளாதாரம் மற்றும் வர்த்தகம்) 214 தொன் நிறையிலான பெய்லி பால தொகுதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) தலைவர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய (DMC) உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் இன்று ஒப்படைத்தார். குறித்த பெய்லி பால தொகுதியானது 2026 பெப்ரவரி 24 ஆம் திகதியன்று விசாகப்பட்டினத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

2. இந்தியாவின் வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்கள் டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் செய்தபோது அறிவித்த 450 மில்லியன் அமெரிக்க டொலர் மீள்நிர்மாண மற்றும் புனர்வாழ்வு தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த பெய்லி பாலங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

3. இலங்கை முழுவதும் உள்ள பல இடங்களில் குறித்த பாலங்கள் பொருத்தப்படும். இலங்கை இராணுவம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுடனான நெருக்கமான ஒருங்கிணைப்பில் இவற்றை பொருத்துவதற்கான தொழில்நுட்ப மதிப்பீடுகள் இந்திய இராணுவ பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு நான்கு பெய்லி பாலங்களை வழங்கியுள்ள நிலையில், அவற்றில் இரண்டு கிளிநொச்சி மாவட்டத்திலும் இரண்டு கண்டி- ராகலை வீதியிலும் நிறுவப்பட்டன. போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு சவால்கள் காணப்பட்ட இடங்களில் அந்த தொடர்புகளை மீட்டெடுப்பதிலும், உள்ளூர் சமூகங்களுக்கான போக்குவரத்தினை மேம்படுத்துவதிலும், அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதிலும் இந்தப் பாலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

5. இலங்கையின் மீட்சிக்கான முயற்சிகளில் இந்தியா தொடர்ந்து பங்காளியாக செயற்பட்டு, உட்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புதல், தொடர்புகளை மீட்டெடுப்பித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சமூகங்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

*****

கொழும்பு
27 பெப்ரவரி 2026